பேரூராட்சியில் இல்லையென்று தெரிவித்து இருந்தேன். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடவசதி அந்தப் பேரூராட்சியில் இருக்கிறது என்று சொல்கிறார். அப்படிப் பட்ட சாத்தியக் கூறுகள் இருக்குமானால் அது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 160, திருமதி ஜெ. லோகாம்பாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 145, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் எடுத்துக் கொள்ளப் படுகிறது. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

145—

தாரமங்கலம் தொகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைத்தல்.

*19782— திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தொளசம்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் விசைத்தறியும், கைத்தறியும் பெருகி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆதலால், அப்பகுதியில் ஒரு விசைத்தறி தொழிற் பேட்டை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதியில் தொளசம் பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் விசைத்தறியும் கைத்தறியும் பெருகி வருவதை அரசு அறியும். ஆனால் அப்பகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க இயலாது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிகள் அதிகமாகப் பெருகி வருகிற காரணத்தால் அங்கே ஒரு விசைத்தறிக் கூடம் அமைத்தால் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால், அந்தப் பகுதியில் விசைத்தறிக் கூடம் அமைப்பதற்கான அடி நிலம், ஆயிரக்

கணக்கான ஏக்கர் நிலம், ஏரிப் புறம்போக்கு நிலம் இருக்கிற காரணத்தால் அந்த இடத்தில் ஒரு விசைத்தறிக் கூடம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலியல் முறையில் இயங்கும் விசைத்தறி இண்டஸ்ட்ரியல் அமைப்பில் பல்வேறு தொழில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தொழிலாளர்கள் பிரச்சினை, தொழிலாளர்கள் ஈட்டுறுதித் திட்டம் மற்றும் வருங்கால வைப்பு நிதி இவற்றையெல்லாம் செயல்படுத்த வேண்டிய சிக்கல் இருக்கிற காரணத்தால் அவைகளை ஏற்படுத்த இயலவில்லை. தொழில் பேட்டைகளை அமைக்க இயலாத நிலையில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களானால் அந்த நெசவாளர்களை ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவார்களானால், அதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

141—

புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துதல்

*21684—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதியிலுள்ள புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

142—

கறம்பக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் நியமித்தல்

*24253—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியிலுள்ள கறம்பக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா ?